# பாரம் தாங்காமல் கவிழ்ந்த டிரைலர் லாரி





■ சென்ட்ரல் ரயில் நிலையம் அருகே, பூந்தமல்லி நெடுஞ்சாலையில், மெட்ரோ ரயில் நிலைய சுரங்கப்பாதை பணிக்காக தோண்டப்பட்ட பள்ளத்தில், விபத்துக்குள்ளான டிரெய்லர் லாரி. ■ டிரெய்லர் லாரி விபத்துக்குள்ளான பகுதியில், போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டு, பள்ளம் சரி செய்யும் பணி நடைபெற்றது.

**சென்ட்ரல், அக். 27–**

சென்ட்ரல் ரயில் நிலையம் அருகே, பூந்தமல்லி நெடுஞ்சாலையில், மெட்ரோ ரயில் சுரங்கப் பாதை நடக்கும் பகுதியில், பாரம் தாங்காமல் விபத்துக்குள்ளான டிரைலர் லாரியால், பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

சென்னை துறைமுகத்தில் இருந்து, 90 டன் அளவிலான இரும்பு காயில்களை ஏற்றியபடி, டிரைலர் லாரி ஒன்று திருவேற்காடை நோக்கி, நேற்று முன்தினம் நள்ளிரவு சென்றது.

லாரியை, தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதுாரைச் சேர்ந்தவர் சசிகுமார், 43, என்பவர் ஓட்டி சென்றார்.

லாரி, சென்ட்ரல் ரயில் நிலையம் அருகே, நள்ளிரவு, 12:00 மணியளவில் வந்து கொண்டிருந்தது. அங்கு மெட்ரோ ரயில்வே சுரங்கப் பாதை பணி நடக்கிறது.

### அதிர்ச்சி

சுரங்கப்பாதை பணி பாதிக்கப்படாத வகையில், 15 அடி நீளமுள்ள இரும்புத் தகடுகள் மேலே அமைத்து, சுரங்கப்பாதை மூடி உள்ளனர். அதன் மேல் வாகனப் போக்குவரத்து நடந்தது.

இந்நிலையில், டிரெய்லர் லாரி, மெட்ரோ ரயில்வே சுரங்கப்பாதை இருப்பு தகடு மேல் கடந்தது. அப்போது, டிரைலர் லாரியின் பாரம் தாங்காமல், சுரங்கப்பாதை பள்ளத்தில் புதைத்தது.

மேலும், ட்ரெய்லர் லாரியில் இருந்த இரும்பு காயல்களும், கழன்று பள்ளத்தில் விழுந்தன.

இதனால், அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அதிர்ச்சியடைந்த டிரைலர் லாரி ஓட்டுனர், வண்டியை அங்கே விட்டு விட்டு தப்பினார். தகவல் அறிந்து வந்த பூக்கடை போக்குவரத்து போலீசார், மெட்ரோ ரயில்வே அதிகாரிகள், 30க்கும் மேற்பட்டோர், சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர்.

போக்குவரத்து போலீசார், பூந்தமல்லி சாலை இருபுறமும் தடுப்புகள் அமைத்து, சாலையை அடைத்தனர்.

அவ்வழியாக வந்த வாகனங்கள், பெரிய மேடு வழியாக திருப்பி அனுப்பப்பட்டது.

பின், மூன்று பெரிய கிரேன்கள் மூலம், பூமிக்கடியில் புதைத்த லாரியை, ஐந்து மணி நேரம் போராடி, வெளியில் எடுத்தனர்.

மேலும் பள்ளத்திற்குள் விழுந்த, தலா, 11 ஆயிரம் கிலோ அளவிலான, ஏழு இரும்பு காயல்களையும், நேற்று காலை வரை போராடி வெளியே எடுத்தனர்.

சம்பவ இடத்தை, வடசென்னை போக்குவரத்து துணை ஆணையர் கிருஷ்ணராஜ், வடசென்னை போக்குவரத்து இணை ஆணையர் ரவிச்சந்திரன், போக்குவரத்து கூடுதல் ஆணையர் கண்ணன் ஆகியோர், நேற்று பார்வையிட்டனர்.

### பரபரப்பு

மேலும், மெட்ரோ ரயில்வே அதிகாரிகள் சம்பவ இடத்தில், முன்னெச்சரிக்கை பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். விபத்து குறித்து, பூக்கடை போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீசார் விசாரிக்கின்றனர்.

மெட்ரோ ரயில் பணிகள் நடக்கும் இடத்தில், அதிக பாரத்துடன் வரும் கனரக வாகனங்கள் இயக்கத்திற்கு, அரசு தடை விதிக்க வேண்டும் எனவும், அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இச்சம்பவத்தால், சென்ட்ரல் அருகே பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

## அசம்பாவிதம் தவிர்ப்பு

சென்ட்ரல் மெட்ரோ ரயில் பணியில் எப்போதும், 20 பணியாளர்கள் வழக்கமாக ஈடுபடுவர். நேற்று, ஆயுதபூஜை என்பதால், மெட்ரோ ரயில் பணி எதுவும் நடக்கவில்லை.

இதனால், பெரும் அசம்பாவித சம்பவம் தவிர்க்கப்பட்டதாக, போக்குவரத்து போலீசார் தெரிவித்தனர்.

## ‘அதிக எடையே விபத்துக்கு காரணம்’

சென்னை, காசிமேட்டில் உள்ள சென்னை துறைமுகம் ஜீரோ நுழைவு வாயில், அனைத்து கன்டெய்னர் லாரி உரிமையாளர்கள் சங்க தலைவர் கோபிநாத் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

சென்னை துறைமுகத்தில் இருந்து, தினமும், 1,000த்திற்கும் மேற்பட்ட கன்டெய்னர் லாரிகள் சென்று வருகின்றன.

ஒரு லாரிக்கு போக்குவரத்து துறை, 35 டன் வரை எடையை ஏற்றிச் செல்லலாம் என நிர்ணயித்தது.

தற்போது, அதற்கு நேர்மாறாக இரு மடங்கு, மும்மடங்கு எடை லாரிகளில் ஏற்றி செல்லப்படுவதால் அதிகளவில் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

நேற்று, சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் அருகே நடந்த விபத்தில், மொத்தம், 90 டன் எடையுடன் லாரி, சுரங்கப்பாதை பணி நடக்கும் இடத்தில் பூமிக்குள் புதைந்தது. 30 டன் எடுத்துச் செல்ல வேண்டிய இடத்தில், 77 டன் ஏற்றி சென்றதால், இந்த விபத்து நிகழ்ந்தது.

லாரிகளில் அதிக எடையால், திடீர் பிரேக் பிடிக்கும்போது வண்டி நிற்காமல் விபத்துக்கள் நடக்கின்றன. அதிக அளவில் உயிரிழப்புகளும் ஏற்பட்டு உள்ளது.

துறைமுக பொறுப்புக் கழகத்தினர் வருமான லாபத்திற்காக, இது போன்ற அதிக எடையுள்ள பொருட்களை லாரியில் ஏற்றுவதால் விபத்துகள் ஏற்படுகிறது. இதை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.